*9*

# திருப்திக்கு உத்தரவாதம் இல்லை

## [பிரசங்கி 5; 6]

*நன்கு புழக்கத்தில் இல்லாத ஒரு உற்பத்திப் பொருளின் மேல் அட்டையில் "திருப்திக்கு உத்தரவாதம் இல்லை" என்று எழுதப் பட்டிருந்தால், அதை வாங்குவதற்கு நீங்கள் தயங்கலாம். தேவபக்தியற்ற வாழ்வு என்பது திருப்திக்கு உத்தரவாதம் அளிப்பதில்லை, ஆயினும் மக்கள் பலர் அதை விரும்புவதாகக் காணப்படுகிறது.*

*பிரசங்கி 5 மற்றும் 6ல் சாலொமோன், ஒரு நபர் தேவனின்றி வாழுதலில் உள்ள வீணான தன்மையைத் தொடர்ந்து வலியுறுத்தினார். தேவனற்ற நிலையில், இயல்பான மனிதன் ஒவ்வொன்றிலும் தடுமாறிக் கலங்கு கின்றான். பூமியில் உள்ள எதுவும் அதன் முடிவைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கப் படுகையில் எந்த அர்த்தமும் கொண்டுள்ளதாகக் காணப்படுவதில்லை. மரணம் என்பதே பூமிக்குரிய வாழ்வின் முடிவாக உள்ளது. மரணம் என்பது மனிதனின் முடிவாக இருக்குமென்றால், வாழ்வின் நோக்கம் தான் என்ன? தேவனிடத்திலிருந்து ஒளியூட்டப்படாவிட்டால் வாழ்வோ அல்லது மரணமோ எந்தக் கருத்துணர்வையும் ஏற்படுத்துவதில்லை.*

*இந்த உண்மையானது, தேவனுடன் நமது உறவின்மீது மாபெரும் முக்கியத்துவத்தை வைக்கிறது. தேவனுடைய சித்தத்தைச் சிதைக்க முடியாது. தேவனுக்கு ஒரு முழுமையான ஒப்புக்கொடுத்தல் என்ற வகையில் இல்லாத எந்த ஒரு தேவபக்தியும் வாழ்வில் வெறுமைத் தன்மையுடன் கூட்டுகிறது. "தேவபக்தியாக" உள்ள மக்களில் பலரும் அதிருப்தி அடைந்திருப்பதில் வியப்பு எதுவும் இல்லை. அவர்கள் தங்களுக்கு வசதியாயிருக்கக் கூடிய அளவுக்குப் போதுமான தேவபக்தியை மாத்திரம் கொண்டுள்ளனர் - உண்மையிலேயே அவர்கள் தேவனைப் பிரியப்படுத்த வில்லை என்று அறிவதற்கு - இருப்பினும் அது, முழுமையான ஒப்புக் கொடுத்தலின் மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பைத் தருவதற்குப் போதுமான தேவபக்தியாக இருப்பதில்லை. சிந்தையில் இந்த நினைவைக் கொண்டு, சாலொமோன் இந்தப் பகுதியை எழுதினார்.*

## தேவனுக்கு அரைமனதுடன் செய்யும் ஊழியம் நம்மைத் திருப்திப்படுத்தாது (5:1-7)

*ஆராதனையில் நாம் தேவனை அணுகுகின்றபோது, நாம் நமது அடிவைப்புகளைக் கவனிக்க வேண்டும் (5:1-3). நாம் தேவனிடத்தில் பேசுவதைவிட அதிகமாக அவர் பேசுவதைக் கவனிக்கும்படிக்கு நாம் அவரை அணுக வேண்டும். பெரும்பான்மையான மக்கள், வெறுமையான பலியில் உள்ள தவறை உணர்ந்து அறிவதில்லை. வசனம் 1ல் உள்ள, "மூடர் பலியிடுவது" என்பது அனேகமாக, ஒரு மனிதன், பலியிடுதலில் தனது புறம்பான நடவடிக்கை மாத்திரமே தேவைப்படுகிறது என்று நினைக்கும் அளவுக்கு மிகவும் மதியீனமாக இருப்பதற்கான குறிப்பாக இருக்கலாம். தேவன் பலி என்பதை மாத்திரம் விரும்புகிறதில்லை; கீழ்ப்படிதலை விரும்புகின்றார். தாழ்மையும் நொறுங்கிய நிலையும் கொண்ட ஆவியையே தேவன் விரும்புகின்றார். மதியீனமான மனிதன் தனது பலியுடன் தேவனை நெருங்கும்போது, அதைத் தேவன் கவனிக்க வேண்டும் என்றும் மன்னிப்பிற்கான தனது அரைமனதான வேண்டுதலை அவர் கவனிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றான்; இருப்பினும் அவன் தேவன் கூறுவதைக் கவனிக்க மனமற்றவனாய்த் தன் வழியில் செல்லுகின்றான்.*

*தேவபக்தியை இவ்விதமாய்க் கையாளுகின்றவர்கள், தேவபக்தி யற்றவர்களைவிட அதிகமாக, அடிக்கடி தங்கள் இடர்ப்பாட்டு வேளை களில் குழப்பம் அடைகின்றனர். தேவன்மீது விசுவாசம் இல்லாதவர்கள் தேவனிடத்தில் இருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை, மற்றும் அவர்கள் ஒன்றுமில்லாததற்குக் கூடத் தேவன்மீது பழிசுமத்துகின்றனர். இதற்கு மறுபுறம், பெயரளவுக்கு ஊழியர்களாய் இருப்பவர்கள், தங்கள் விருப்பங் களைத் தேவன் திருப்திப் படுத்த வேண்டும் என்று அடிக்கடி நினைக் கின்றனர். இந்தத் தனிநபர்கள் தங்களையோ அல்லது தங்கள் பிரச்சனை களையோ தேவனிடத்தில் ஒப்புவிக்கப் போதுமானதாக இராத விசுவாசத்தைக் கொண்டுள்ளனர்.*

*தேவனை மரியாதைக் குறைவான அல்லது உண்மையற்ற வகையில் அணுகுதல் பற்றி சாலொமோன் எச்சரிக்கை செய்தார் (5:2). உண்மையில் அவர், "தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத் திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய்" என்று கூறினார். தேவ சமூகத்தில் மிகவும் அதிகமாய்ப் பேசுகின்ற ஒரு மனிதன் தனது வாயினால் பாவம் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றான். மதியீனன் தான் தேவனை அணுகும்போது மிக அதிகமாய்ப் பேசுகின்றான் (5:3).*

*நாம் தேவனிடத்தில் பொருத்தனைகள் பண்ணுகின்றபோது, அவற்றை நாம் காத்துக்கொள்ள வேண்டும் (5:4-7). பொருத்தனை செய்து அதை நிறை வேற்றாமல் போகிறதைக் காட்டிலும், பொருத்தனை செய்யாதிருக்கிறது நல்லது. நாம் செய்ய இயலாதவற்றையோ அல்லது செய்ய விரும்பாத வற்றையோ வாக்களிக்கக் கூடாது. நமது சரீரங்களினால் காத்துக்கொள்ள முடியாதவற்றை நமது வாய்கள் வாக்குறுதி அளிக்கின்றபோது, நாம்*

*நெறிதவறுதலினால் பாவம் செய்கின்றோம். "நான் தவறு செய்தேன்" என்பது போன்றவற்றைக் கூறுதலினால் நமக்கு நாமே சாக்குப்போக்குக் கூறிக்கொள்ளுதல் என்பது எந்த நன்மையும் செய்யாது. நாம் தேவனுக்கு முன்பாகவும் அவரது தூதுவர்களுக்கு முன்பாகவும் ஜாக்கிரதையாகவும் நேர்மையாகவும் பேசவேண்டும் என்று சாலொமோன் கூறினார். வசனம் 6ல் உள்ள, "தூதன்" என்பது பலிசெலுத்துகின்ற அல்லது பொருத்தனைக்குச் சாட்சியாய் இருக்கின்ற ஆசாரியர் அல்லது தேவனுடைய பிரதிநிதியைக் குறிப்பிடக்கூடும்.*

*தேவனுடன் நமது உறவுமுறை என்பது மிகுந்த அக்கறைக்குரிய விஷய மாக உள்ளது. தேவனுக்கான நமது ஊழியம்பற்றிப் பெரிய கனவுகளைக் காணுதலும் பெருமையடித்துக் கொள்ளுதலும் வீணானதாக உள்ளது (5:7). வாழ்க்கை என்பது வினயமானதாக உள்ளது, அதைக் கொடுப்பவரை மரியாதையுடனும் பயபக்தியுடனும் அணுக வேண்டும்.*

*இதே விதமான உணர்வுகள் 1 சாமு. 15:22லும் விவரிக்கப்படுகின்றன. சவுல், அமலேக்கியர்களை அழிப்பதில் தேவனுடைய கட்டளைகளைச் செயல்படுத்த தவறியிருந்தார். அவர்(சவுல்) எல்லாவற்றையும் அழிக்க வேண்டும் என்று தேவன் கூறியிருந்தார், ஆனால் சவுலோ, பலிசெலுத்து வதற்கென்று மிகச் சிறந்தவற்றைக் காத்துவைப்பது நலமாய் இருக்கும் என்று நினைத்தார். அவர் அமலேக்கியரின் இராஜாவாயிருந்த ஆகாக் என்பவனை யும் உயிருடன் வைத்திருந்தார். தேவன் சாமுவேல் தீர்க்கதரிசியை, சவுலைச் சந்தித்து அவர் எவ்வாறு தேவனைப் பிரியப்படுத்தாதிருந்தார் என்று கூறும்படி அனுப்பி வைத்தார். முதலில் சவுல், தமக்குத் தேவன் கூறியபடி யெல்லாம் செய்திருந்ததாகக் கூறினார். அவர் ஆகாகை மாத்திரமும் பலிகள் செலுத்துவதற்கென்றே ஆடு மாடுகளையும் உயிருடன் வைத்திருந்ததாகக் கூறினார். அது சரியானதாகத்தான் இருந்திருக்க வேண்டும், அல்லவா? தேவன் பலியை விரும்புகின்றார் அல்லவா? சாமுவேல், "கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்" என்று கூறினார் (1 சாமு. 15:22). கீழ்ப்படிதல் இல்லாத பலி என்பது தேவனுக்கு எதையும் அர்த்தப்படுகிறது இல்லை. வெறுமையான பலி என்பது தேவனுக்கோ அல்லது மனிதனுக்கோ திருப்தியைக் கொண்டுவருவதில்லை.*

## செல்வங்கள் நம்மைத் திருப்திப்படுத்தாது (5:8-6:6)

*செல்வங்களும் ஒரு மனிதனுக்குத் திருப்தியைக் கொடுக்க மாட்டா என்று சாலொமோன் கண்டறிந்தார். ஆதாயத்தின்மீதான விருப்பமானது செல்வந்தர்கள் ஏழைகளை ஒடுக்கக் காரணமாகக் கூடும் (5:8, 9). இந்த சந்தர்ப்பப் பொருளில் சாலொமோன், ஒடுக்கப்பட்டவர்கள் அதிகாரிகளின் முன்னிலையில் தங்கள் வழக்குகள் நியாயமாக விசாரிக்கப்படுதலில் பெறும்*

*சிரமங்களைக் கலந்துரையாடினார். நியாயமானது புரட்டப்படுதலில் உள்ள பிறழ்வுகளைக் காண்பதில் மனிதர் திகைப்படையக்கூடாது. அவர், "ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப் படுகிறதையும் நீ காண்பாயானால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதே, உயர்ந்தவன்மேல் உயர்ந்தவன் காவலாளியாயிருக்கிறான், அவர்கள்மேல் உயர்ந்தவரும் ஒருவருண்டு" என்று கூறினார் (5:8). அரசு அலுவலர் ஒவ்வொருவரும் இன்னொருவருக்குப் பொறுப்பாளியாய் இருக்கின்றார், எனவே, அரசாங்கத்திற்கு விடுக்கப்படும் வேண்டுகோளானது செயல் முறையில் எங்காவது தொலைந்து போய்விடக்கூடும், அவற்றிற்கான பொறுப்பை எவரொருவரும் ஏற்றுக்கொள்வதில்லை.*

*சாதாரண மனிதரிடமிருந்து, அதிகார வர்க்கத்தினர் சுயநலமான ஆதாயம் பெற்றுக்கொள்வதைக் காண்பதில் சாலொமோன் கலவரம் அடைந்தார். அரசர் தொடங்கி ஒவ்வொருவரும் நாட்டின் உற்பத்தியில் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை அரசு அலுவலர்கள் உணர வேண்டும் என்று அவர் நினைத்தார். நாட்டில் சாதாரண மனிதர்களே உழைத்தனர் என்பதால், எல்லா மக்களையும் விட அம்மனிதர் ஒடுக்கப்படக்கூடாது. அவர் தேசத்திற்காக உழைப்பதில் சம்பாத்தியத்தை ஈட்டுகிறார். இதை உணர்ந்தறிந்து ஒடுக்கப்பட்டவர்களின் வேண்டுகோள்களைக் கேட்பவர் என்பவர் அசாதாரணமான அரசராயிருப்பார். இது வாழ்வில் பயனற்ற இன்னொரு போராட்டமாக உள்ளது. சாதாரண மனிதனுக்கு நியாயம் தருவதைப் புறக்கணிக்கிற அரசு தானாகவே அழிகிறது. இது சுய இலாபத்திற்காகச் செய்யப்பட்டாலும், கடைசியில் இது சுய அழிவாகவே உள்ளது.*

*பண ஆசை என்பது ஒருக்காலும் திருப்திப்படுத்தப் படுவதில்லை (5:10-12). செல்வங்கள் பெருகுகையில், பணத்தைச் செலவிடும் விருப்பத் தேர்வுகளும் பெருகுகின்றன. பணத்தைக் கொண்டிருப்பவர்கள் அது தங்கள் கைவிரல்களில் இருந்து நழுவி ஓடுவதைக் கவனிப்பது தவிர வேறு எந்த நன்மையைக் காணுகின்றனர்? ஏராளமான செல்வத்தைக் கொண்டிருத்தல் என்பது கடைசிப் பகுப்பாய்வில் எதையும் அர்த்தப்படுத்து வதில்லை. இரவில் நன்கு உறங்குபவர் யார்? - சாதாரண, உழைக்கும் மனிதனா அல்லது செல்வந்தனான மனிதனா? உழைக்கும் மனிதன் கொஞ்சமாய் உண்டாலும் அதிகமாய் உண்டாலும், அவன் தன் படுக் கைக்குச் சென்று இனிய நித்திரையை மகிழ்வுடன் அனுபவிக்கலாம். செல்வத்தைப் பற்றிச் செல்வந்தன் கொண்டுள்ள கவலை அவனைத் தூங்க அனுமதிக்காது.*

*நிகழ்ச்சிகளின் சில விக்கினத்தால் செல்வம் எடுக்கப்படும்படியாக மட்டும் செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தைப் பதுக்கிவைப்பது கருத்தறி வற்ற தீமையாக உள்ளது (5:13-17). செல்வங்கள் எனப்படுபவை, முதலீடுகளில் காணாமற் போய்விடலாம், களவு செய்யப்படலாம் அல்லது சுகவீனத்தில் செலவு செய்யப்படலாம். எவ்வகையிலும், ஒருவருக்கு மரபுரிமையாக விட்டுச் செல்லுதல் என்பது எதுவுமே இல்லை. அது தன்னிலேயே மோசமானதல்ல, ஏனெனில் நாம் ஏற்கனவே, மற்றவர்கள்*

*செலவிடும்படிக்கு ஏராளமான சொத்தினைவிட்டுச் செல்லுதலில் உள்ள பயனற்ற தன்மையைக் கண்டிருக்கின்றோம். சாலொமோன், செல்வத்தைப் பதுக்கி வைப்பதிலும் கவனமின்மையின்/பொறுப்பின்மையின் மூலம் அதை இழப்பதிலும் உள்ள பயனற்ற தன்மையை விவரித்தார். கடைசியில், ஒரு மனிதன் தான் பிறந்தபோது இருந்த - ஒன்றுமின்மை என்ற - அதே நிலையில் மாத்திரமே இருக்கின்றான்.*

*இந்த உற்றுக்கவனித்தல்கள் சாலொமோனை அவரது முந்திய முடிவுக்குத் திரும்பச் செய்தன: அதாவது, ஒரு மனிதன், தனக்குத் தேவன் ஆசீர்வதித்திருக்கின்ற தனது உழைப்பின் பலனை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பது அவனுக்கு மிகவும் சிறந்ததாக உள்ளது (5:18-20). செல்வத்தைப் பெற்றுள்ளவர்கள் அதை தேவனிடத்தில் இருந்து வந்த ஒரு கொடையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்பு அவர்கள் செல்வத்தை மகிழ்வுடன் அனுபவிக்கவும், அதைத் தாங்கள் கொண்டிருக்கையில் தக்க வகையில் பயன்படுத்தவும் (கிருபை அளிக்கும்படி) தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். அதுவும்கூட தேவனிடத்திலிருந்து வருகிற ஒரு வரமாகவே உள்ளது. இதைச் செய்கின்ற நபர் தமது (கடந்தகால) வாழ்வை வருத்தத்துடன் திரும்பிப் பார்க்க மாட்டார். அவர் வாழ்வதற்குத் தேவன் அவருக்கு இருதயத்தில் உணரப்பட்ட மகிழ்ச்சியைக் கொடுக்கின்றார்.*

*தேவன் சில மனிதர்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கின்றார் ஆனால் அவர்கள் மகிழ்வுடன் அதை அனுபவிப்பதற்கு உடல்நலத்தைக் கொடுப்பதில்லை என்பது செல்வங்களைப் பற்றிய இன்னொரு பிரச்சனையாக உள்ளது (6:1-6). இது பயனற்றதாக உள்ளது, ஏனெனில் அவர்கள் மரித்து, அவற்றை மற்றவர்கள் செலவிடும்படி விட்டுச் செல்லுகின்றனர். ஒரு மனிதன் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து நூறு பிள்ளைகளைப் பெற்று முதிர்வயதுள்ளவனாக இருந்தும், அவன் தனது உழைப்பின் பலனை மகிழ்வுடன் அனுபவிக்க இயலாதவனாக இருந்தால், அவன் மரிப்பது மேன்மையாக இருக்கும் என்று சாலொமோன் நினைத்தார் (6:3). அவன் பிறந்தபோதே இறந்திருந்தால், அவன் பகலின் வெளிச்சத்தைக் கண்டிருக்க மாட்டான்; அவன் தனது பெயரை முதலாய் அறிந்திருக்க மாட்டான். அதுவும் நல்லதாகக் காணப்படுவதில்லை, ஆனால் அது சாலொமோனுக்கு, முதிர்வயதான மகிழ்ச்சியற்ற மனிதனாக இருப்பதைக் காட்டிலும் மேன்மையானதாகக் காணப்பட்டது. ஒரு மனிதன் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்தும் ஒருக்காலும் மகிழ்ச்சியோ திருப்தியோ இல்லாதவனாக இருந்தால், வாழ்தலின் நோக்கம்தான் என்னவாக இருக்கும்?*

## *விருப்பங்களை நிறைவேற்ற நாடுதல் திருப்தியளிக்காது (6:7-12)*

*விருப்பம் என்பது திருப்திசெய்யப்பட இயலாததாக உள்ளது (6:7-9). ஞானியும் மதியீனனும் உணவுக்காக உழைப்பதிலேயே தங்கள் வாழ்வைச் செலவிடுகின்றனர். இருவரில் எவருமே, போதுமானவற்றைப் பெற்றதாக*

*ஒருக்காலும் காணப்படுவதில்லை. ஞானியாக இருக்கின்ற ஏழை மனிதன் முடிவில், மதியீனனாக இருக்கின்ற செல்வந்தனைக் காட்டிலும் மேன்மை யானவனாக இருக்கின்றான். அவன் தனது பசிகளை நன்கு கட்டுப்படுத்தக் கற்கின்றான். அவன் தனது எல்லா விருப்பங்களையும் ஒருக்காலும் நிறைவேற்றிக் கொள்வதில்லை. அதிகமாக விரும்புவதைக் காட்டிலும் நம்மிடத்தில் உள்ளவற்றை மதித்தல் என்பது மேன்மையானதாக உள்ளது. அதிகமானவற்றை விரும்புதல் என்பது பயனற்றதாக உள்ளது.*

*“என்ன இருக்க வேண்டுமென்றிருக்கிறதோ, அது இருக்கும்” என்பது தவிர்க்க இயலாத முடிவாக உள்ளது (6:10-12). எல்லா நிகழ்ச்சிகளும் தேவனுடைய கரங்களில் உள்ளன. நாம் வெறும் மனிதர்கள் மட்டுமே என்பதையும் தேவனிடம் வாதிடவோ அல்லது அவரை சந்தேகிக்கவோ கூடாது என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டும். தேவனில்லாமல் நமது உழைப்புகள் யாவும் பயனற்றவைகளாக உள்ளன - அவைகள் கருத்து எதையும் ஏற்படுத்துவதில்லை. எனவே தேவனிடத்தில் விவாதம் செய்து நமக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது? கடந்துசெல்லும் நிழல்களை விடச் சற்றே மேலானவர்களாக இருக்கின்ற நாம், எது நமக்கு மிகச் சிறந்தது என்று எப்படி முடிவு செய்ய இயலும்?*

## *முடிவுரை*

*எதிர்காலம் ஒரு மனிதனுக்கு எதை வைத்துள்ளது என்று எவரால் கூறமுடியும்? நாம் நமது வாழ்வைத் தேவனிடத்திற்குத் திருப்பவும், அவர் நமக்கு மிகச்சிறந்தது எது என்பதை அறிந்துள்ளார் என்று அவர்மீது நம்பிக்கை வைக்கவும் முடியாதென்றால், வாழ்வின் அர்த்தத்தைக் கண்டறிவதில் எந்த நம்பிக்கையும் இல்லை.*

*தேவனை மதியாதிருத்தல் என்பது நமது ஒரே நம்பிக்கையைத் தூக்கி யெறிதலாக உள்ளது. எரேமியா, “கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவ னாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்” என்று கூறினார் (எரே. 10:23). உலகப் பிரகாரமான எந்த ஒரு தேடுதலும் நமது ஆழமிக்க ஏக்கங்களைத் திருப்திப்படுத்தாது. நமது மிகச்சிறந்தவற்றை உண்மையுடன் தேவனுக்கு கொடுத்தல் என்பது மாத்திரமே திருப்திக்கான நமது ஒரே ஆதாரமூலமாக உள்ளது.*